**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 19/2021 |
| Name | : Narayanasamy |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொமரலிங்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.06.2017 ம் தேதி நான் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது பகல் ரோந்து அலுவலாக நானும், என்னுடன் பணிபுரிந்த காவலர் 760 முருகன் என்பவரும் ரோந்து அலுவலாக கொமரலிங்கம், சாமராயப்பட்டி, பெருமாள் புதூர் ஆகிய ஊர்களுக்கு ரோந்து சென்று பாப்பான்குளம் வந்து அங்கு கூட்டுறவு தொடக்க வேளாண்மை அருகே தணிக்கை செய்து அங்கு தென்புறமாக உள்ள மண்பாதையில் சென்ற போது அங்கு புதிததாக கட்டியிருந்த அரசு உயர்நிலைப் பள்ளி அருகே நின்றிருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த சின்னப்பன் மகன் மணிவாசகம் என்பவரை விசாரித்துக்கொண்டிருந்த போது நாங்கள் நின்றிருந்ததற்கு வடபுறமாக 30 அடி துாரத்தில் ஒரு அட்டைப் பெட்டி இருந்தது. அதில் Explosives என்று எழுதப்பட்டிருந்தது. அது யாருடையது என்று மணிவாசகத்தை விசாரித்த போது அவர் முன்னுக் பின்னாக பதில் கூற அவரை அழைத்துக்கொண்டு பெட்டி இருக்கும் இடத்திற்கு சென்று பெட்டியை பிரித்து பார்த்த போது அதில் டெட்டனேட்டர்கள்

இருந்தது. அந்த டெட்டனேட்டர் இருந்த பெட்டிக்கு அருகில் 5 பெட்டிகளில் Explosives என்று எழுதப்பட்டிருந்தது. மொத்தம் 6 பெட்டிகள் இருந்தது. இதைப் பற்றி விசாரிக்க அவர் சரியான பதில் கூறவில்லை. இது யாருடைய பூமி என்று விசாரிக்க இது என் அப்பா சின்னப்பன் என்பவருடையது என்றும் அவர் விவசாயம் செய்து வருவதாகவும் கூறினார். அந்த வெடி பொருட்கள் பாதுகாப்புடம் இருப்பதால் நான் என்னுடன் வந்த காவலர் முருகனை அந்த இடத்தில் விட்டுவிட்டு நான் காவல் நிலையம் வந்து அங்குஅலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் அழகர்சாமி என்பவரிடம் தெரிவித்தேன். அவர் என்னிடம் தனியறிக்கை கேட்டார். அதன்படி நான் தனியறிக்கை கொடுத்தேன். **அந்த தனியறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் பட்டியல் சாட்சி 2 விசாரிக்கும் போது இந்த சாட்சியை விசாரிப்பதாக அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்